மொண்டிபாளையத்தில் கால்நடை மருத்துவ மனை.

* வினா 60—திரு. சொ.ந. பழனிசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மொண்டிபாளையத்தில் பொது மக்களால் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையினை அரசு ஏற்று, அங்கு ஒரு கால்நடை மருத்துவரை நியமிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ;— மொண்டிபாளையத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கும் கால்நடை உதவி மருத்துவர் நியமனம் செய்யவும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சொ. ந. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மொண்டிபாளையத்தில் மருத்துவ மனை துவக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லையென்று சொல்லுகிறார்கள். அந்த யூனியன் ஜனத்தொகைக்கேற்ப பரிசீலனை செய்து மேற்படி மருத்துவ மனை துவக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கோவை மாவட்டம் அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில், அவினாசியில் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்படுகிறது. மேற்படி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது கால்நடை மருந்தகமாக சேயூரில் மருந்தகம் துவக்குவது குறித்த செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது. கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களால் சேயூருக்குப் பதிலாக மொண்டிபாளையத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு தற்போது அவசியம் இல்லை என்று கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் கூறியுள்ளார்.

சேயூரில் உள்ள கால்நடை கிளை நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் சேயூர் மற்றும் அவ்வூரைச் சுற்றியுள்ள 17 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 24,938. மொண்டிபாளையம் மற்றும் அவ்வூரைச் சுற்றியுள்ள 10 கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 12,722.

மொண்டிபாளையத்தில் பொது மக்களால் கட்டப்பட்டுள்ள கட்டிடம் கால்நடை கிளை நிலையம் மட்டும் செயல்பட தேவையான அளவில்உள்ளது. கால்நடை மருந்தகம் செயல்படுவதற்குப் போதுமானதாக இல்லை மேலும் அது கோயில் புறம்போக்கில் இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஒப்புதலின்றி கட்டப்பட்டுள்ளது.

1979 அக்டோபர் 31]

சேயூரிலிருந்து மொண்டிபாளையம் 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சேயூரில் கால்நடை மருந்தகம் துவக்கப் பட்டால், அது மொண்டிபாளையத்தில் உள்ள கால்நடைகளின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும்.

எனவே, மொண்டிபாளைத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்கு காவல் துறையின் தனிப் பிரிவு

*வினா எண். 60–அ— திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகப் பணிகளுக்கு துணையாக தனி துணைக் காவல் நிலையம் வேண்டுமென்று மாநகராட்சி நிர்வாகம் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு அந்த கோரிக்கை அரசுக்கு வந்தது?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : (அ) & (ஆ) சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப் பதற்கும், சட்டதிட்டங்களை திறம்பட அமல் படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணையாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், எட்டு காவலர் களையும் கொண்ட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி அரசுக்கு 27–12–1975 நாளிட்ட கடிதத்திலே ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். சென்னை மாநகரத்தில் நடக்கும் நகர் நலக் குற்றங்களை (Civic offences) தடுக்கும் பொருட்டு 1976 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர், எட்டு காவலர்–தரம் 1 ஆகியோரை அரசு நியமித்து விட்டதால் மாநகராட்சி தனி அதிகாரி அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் ; செயலர் சொன்ன விவரங்கள் எனக்குப் புரியவில்லை. மீண்டும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சட்டதிட்டங்களைத் திறம்பட அமல்படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணையாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள்,